◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED24 NEWS
हर खबर, हर शहर

நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION
UNDER PROCESS
Application No.
T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN
24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

◆ DIGITAL NEWS NETWORK ◆
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता

காரைக்குடி தளபதி விஜய் பயிலகத்தில் தீபாவளி கொண்டாட்டம்.



காரைக்குடியில் இயங்கி வரும் தளபதி விஜய் பயிலகத்திற்கு இன்றைய தினம் மாண்புமிகு கனிம வளத்துறை அமைச்சர் டாக்டர் பிரபு அவர்கள் அறிவுரைப்படி தீபாவளி மற்றும் பயிலகம் ஆரம்பித்து 200 நாட்களை கொண்டாடும் விதமாக மாணவர்களுக்கு இனிப்புகள் மற்றும் புத்தாடைகள் வழங்கப்பட்டது.

— M. Arumugam

POLITICS

புதுச்சேரி உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில் சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து மேலாண்மை ஆலோசனைக் கூட்டம்



புதுச்சேரியில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் தலைமையில், டிஜிஜி சத்தியசுந்தரம் மற்றும் சீனியர் எஸ்பி கலைவாணன் ஆகியோர் கலந்து கொண்டு, சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து மேலாண்மை தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் முக்கிய நோக்கம், நகரில் சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் போக்குவரத்து நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை பரிசீலிப்பதாகும். பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளை சிறப்பாக அமல்படுத்தும் வழிகளை விவாதித்தனர்.

கூட்டத்தில், காவல் துறை மற்றும் போக்குவரத்து அதிகாரிகள் இடையிலான தொடர்பை வலுப்படுத்தும், அவசரநிலைகளில் விரைவான பதில் அளிக்கும் முறைகளை உருவாக்கும் போன்ற பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. இதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நகரின் போக்குவரத்து சீர்மையைக் கூட்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும்.

— Sudhakaran, Puducherry

LOCAL

ரோஜா நகர் பகுதியில் புதிய ஆழ்துளைக் கிணறு திறப்பு: டாகடர் K. நாராயணசாமி மின்மோட்டாரை இயக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்



புதுச்சேரி, உழவர்கரை தொகுதிக்குட்பட்ட மூலக்குளம் ரோஜா நகர் பகுதியில் பொதுப்பணித்துறையின் பொதுச் சுகாதாரப் பிரிவு சார்பில் ரூ.17,23,139/- மதிப்பீட்டில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, மின்மோட்டார் மற்றும் நீரேற்று வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

இந்தப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, உழவர்கரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திரு. K. நாராயணசாமி அவர்கள் நீரேற்று நிலையத்தைத் திறந்து வைத்து, மின்மோட்டாரை இயக்கி பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார்.

திறப்பு விழாவில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், பொறியாளர்கள் மற்றும் அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் அப்பகுதி முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த புதிய நீரேற்று வசதி, ரோஜா நகர் மற்றும் சுற்றியுள்ள கிராமப்புற மக்களுக்கு நீர்வழங்கல் சிக்கல்களை தீர்க்கும் முக்கியமான படியாகும், மேலும் பொதுச் சுகாதார மேம்பாட்டிலும் உதவும்.

— Sudhakaran, Puducherry

முன்னாள் முதல்வர் பேட்டி



முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி பேட்டி

புதுச்சேரியில் காவல்துறை மோசமாக செயல்படுகிறது. இந்த ஆட்சிக்கு கெட்ட பெயர் வரவேண்டும் என்பதற்காக சக அமைச்சர்களே சதி செய்கிறார்கள். ரோந்து பணி செய்வதற்கு கூட காவல்துறையினர் லஞ்சம் கேட்கிறார்கள். காவல்துறை அமைச்சர் என்ன செய்கிறார். அமைச்சர் தூங்கி கொண்டிருக்கிறார். மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. புதுவையில் நடைபெறும் கொலைகளில் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இன்று துணை நிலை ஆளுநருக்கும்,முதலமைச்சர் ரங்கசாமிக்கும் பனிப்போர் நடக்கிறது. இந்த ஆட்சி 5 ஆண்டுகள் நடக்குமா என்கிற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. நாங்கள் கொள்கைக்காக ஆளுநருடன் போராடினோம், ஆனால் இவர்கள் கொள்ளை அடிப்பதற்காக போராடுகிறார்கள்.

— Sudhakaran, Puducherry

காரைக்குடி சட்டமன்ற தொகுதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு.



தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெளியிடப்பட்டது. காரைக்குடி சட்டமன்ற தொகுதிக்கான வரைவு வாக்காளர் பட்டியலை அந்தந்த தொகுதி உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டனர்.

— M. Arumugam

LOCAL

புதுச்சேரியில் 'ஆபரேஷன் புதுவை கவசம்' மூலம் கடற்கரைச் சாலைகளில் ரோந்து தீவிரப்படுத்தல்



புதுச்சேரியில் 'ஆபரேஷன் புதுவை கவசம்' என்ற பாதுகாப்பு நடவடிக்கையின் கீழ், காவல்துறையினர் நேற்று இரவு கடற்கரைச் சாலை, சுற்றுலாத் தளங்கள் மற்றும் முக்கியச் சாலைகளில் ரோந்து பணிகளை தீவிரப்படுத்தினர்.

இந்த நடவடிக்கையை துணைக் காவல் தலைவர் டிஜிஜி சத்தியசுந்தரம் ஐ.பி.எஸ். மற்றும் காவல் மூத்த கண்காணிப்பாளர்கள் கலைவாணன், நித்யா ராதாகிருஷ்ணன் ஆகியோரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டது.

பொது இடங்களில் மது அருந்துவோர் மீது நடவடிக்கை, சந்தேக வாகனங்கள் சோதனை மற்றும் திடீர் வாகனத் தணிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கையால் நகரின் பாதுகாப்பு நிலை உயர்த்தப்பட்டு, பொது மக்களின் பாதுகாப்பு உணர்வு மேம்படுத்தப்பட்டுள்ளது.

— Sudhakaran, Puducherry

காரைக்குடி அருகே குன்றக்குடியில் வேளாண் பயிற்சி முகாம்.



காரைக்குடி அருகே குன்றக்குடியில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில், வேளாண் பயன்பாட்டில் புதுப்பிக்கதக்க ஆற்றல் தொழில் நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான இலவச பயிற்சி நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

— M. Arumugam

சாலைகளில் சுற்றித் திரிந்த மாடுகளை பிடித்து வேலூர் மாநகராட்சி நடவடிக்கை: ரூ.6 ஆயிரம் அபராதம் விதிப்பு..



சாலைகளில் சுற்றித் திரிந்த மாடுகளை பிடித்து வேலூர் மாநகராட்சி நடவடிக்கை; ரூ.6 ஆயிரம் அபராதம் விதிப்பு..

வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட முக்கிய சாலைகளில் சுற்றித் திரியும் கால்நடைகளால் வாகன ஓட்டிகளுக்கும் பொதுமக்களுக்கும் விபத்து அபாயமும் ஏற்பட்டு வந்தது. இதையடுத்து

சாலைகளில் திரியும் மாடுகளைப் பிடிக்கும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி மாநகராட்சி உட்பட்ட ஆற்காடு சாலை மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே போக்குவரத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையூறாகச் சாலையில் சுற்றி திரிந்த மாடுகளை மாநகராட்சி பணியாளர்கள் பிடித்தனர்.

மேலும் மாடுகளின் உரிமையாளர்களுக்கு ரூ 6 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கும் வாகனப் போக்குவரத்திற்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் கால்நடைகளைச் சாலைகளில் திரியவிட்டால் அவை தொடர்ந்து பறிமுதல் செய்யப்பட்டு உரிமையாளர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மாநகராட்சி அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு வாகன ஓட்டிகள் பொதுமக்கள் பாராட்டி மேலும் புதிய பேருந்து நிலையம், விருதம்பட்டு, காட்பாடி, தோட்டபாளையம், காட்பாடி சாலை, ஆபிசர் லைன், அண்ணா சாலை போன்ற பிரதான சாலைகளில் உள்ள மாடுகளை பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறுகின்றனர்.

— A RAM PRABHU

காட்பாடியில் இந்து முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



காட்பாடி சித்தூர் பேருந்து நிலையம் அருகில் இந்து சமய அறநிலையத் துறையைக் கண்டித்து இந்து முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

காட்பாடியில் உள்ள தாரபடவேடு மதுரா சுந்தரி அம்மன் கோவிலில் பூஜைகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கோவில் இடத்தில் கடை வைத்துள்ள மாற்று மதத்தைச் சேர்ந்த நபர் கோவிலின் பாரம்பரிய ஆன்மீக நடைமுறைகளுக்கு அத்துமீறி இடையூறு செய்து, கிண்டல் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இதற்கு உடந்தையாகச் செயல்படும் அறநிலையத் துறை செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்காத அறநிலையத் துறை இணை ஆணையரின் மெத்தனப் போக்கை கண்டித்தும் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில்

இந்து முன்னணி மாநில நிர்வாக குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

— A RAM PRABHU

CRIME

13 வயது காணாமல் போன சிறுமி லாஸ்பேட்டை காவல் நிலையம் விரைவாக மீட்டது – DIG பாராட்டு



10.11.2026 அன்று காலை பள்ளிக்குச் சென்ற 13 வயது சிறுமி, லாஸ்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அவ்வை நகரில் மாலையில் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் புகார் செய்தனர்; போலீஸ் வழக்கு பதிவு செய்து விசாரணை

உறுபபினர மறறும உறுபபினரகள கலந்து கொண்டனர்.

— A RAM PRABHU

CRIME

13 வயது காணாமல் போன சிறுமி லாஸ்பேட்டை காவல் நிலையம் விரைவாக மீட்டது – DIG பாராட்டு



10.11.2026 அன்று காலை பள்ளிக்குச் சென்ற 13 வயது சிறுமி, லாஸ்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அவ்வை நகரில் மாலையில் வீடு திரும்பவில்லை என்று பெற்றோர் புகார் செய்தனர்; போலீஸ் வழக்கு பதிவு செய்து விசாரணை தொடங்கியது.

திரு. சத்திய சுந்தரம் DIG, திரு. கலைவாணன் SSP, திரு. அனுராக் சோப்ரா கண்காணிப்பாளர் (வடக்கு) ஆகியோரின் உத்தரவின்படி, லாஸ்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் திரு. பாலமுருகன் தலைமையில் வடக்கு குற்றப்பிரிவு மற்றும் லாஸ்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு காவலர்கள் இணைந்து துரிதமாக நடவடிக்கை எடுத்து, சிறுமியை பாதுகாப்பாக மீட்டனர்.

மீட்பு பிறகு சிறுமிக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டு, பெற்றோருடன் பாதுகாப்பாக சேர்க்கப்பட்டது.

இந்த வேகமான மற்றும் திறமையான நடவடிக்கைக்கு DIG திரு. சத்திய சுந்தரம் அவர்களால் காவல்துறையினர் பாராட்டப்பட்டனர்.

— Sudhakaran

காரைக்குடியில் இளைஞர் நாடாளுமன்றம்.



காரைக்குடி அருகே புதுவயலில் உள்ள வித்யாகிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இன்று இந்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், MY Bharat கேந்திரா சிவகங்கை மற்றும் கல்லூரி சார்பில் மாவட்ட அளவிலான விக்சித் பாரத் இளைஞர் நாடாளுமன்றம் 2026-2027 நிகழ்ச்சி நடைபெற்றன. இதில் கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் MY Bharat தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

— M. Arumugam

CRIME

திருச்சுழி தேவர் சிலை அருகில் CCTV கேமராக்கள் சேதம், 35 வயது அருண்குமார் கைது



வருவாய்த்துறை அதிகாரிகள் திருச்சுழி மாவட்டம் திருச்சுழி தேவர் சிலை அருகில் அமைந்த CCTV கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் சுவர் சேதம் கண்டறிந்து, உடனடியாக விசாரணை தொடங்கினர்.

விசாரணையில், திருச்சுழி மேலத்தெருவை சேர்ந்த 35 வயது முத்துராமலிங்கம் மகன் அருண்குமார், இரவு நேரத்தில் பேவர் பிளாக் கற்களைப் பயன்படுத்தி கேமராக்களை சேதப்படுத்தி, சுவரை உடைத்தார் என்று தெரியவந்தது.

அருண்குமார் பொதுமக்களுக்கு கொலை மிரட்டல் செய்ததாகவும், இதைத் தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர் சந்தனமாரி புகார் அளித்து, திருச்சுழி போலீசார் வழக்குப் பதிவு செய்து அவரை அதிரடியாக கைது செய்தனர்.

காவல்துறை விசாரணை தொடர்கிறது; சம்பவம் தொடர்பான கூடுதல் தகவல்கள் கிடைக்கும் போது

காரைக்குடி - கண்டனூரில் கால்பந்து இறுதிப்போட்டி.



காரைக்குடி அருகே உள்ள கண்டனூரில் தீபாவளி தினத்தை முன்னிட்டு நண்பர்கள் கால்பந்து கழகத்தின் 52'ஆம் ஆண்டு மாபெரும் எழுவர் கால் பந்து போட்டி கடந்த 3 தினங்களாக நடைபெற்று வந்தது. இப்போட்டியின் இறுதி போட்டியை நேற்று கனிமவளத்துறை அமைச்சர் டி. கே. பிரபு அவர்கள் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்.

— M. Arumugam

காரைக்குடியில் EHUB திட்டத்தை செய்ய கோரி கோரிக்கை மனு.



காரைக்குடி சார்பு அலுவலக பதிவுக்கு உட்பட்ட 19 சார்பதிவாளர் அலுவலகங்களில் பணியாற்றும் வழக்கறிஞர்கள் ஆவண எழுத்தர்கள் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

— M. Arumugam

காரைக்குடி அழகப்பா கல்வி நிறுவனத்திற்கு பெரிய நன்கொடை.



காரைக்குடி அழகப்பா கல்லூரியின் பவளவிழா நடைபெறுவதையொட்டி இக் கல்லூரியின் 1990-ஆம் ஆண்டு மின்னணுவியல், தகவல் தொடர்பியல் துறை முன்னாள் மாணவரும், பிரபல தொழில்முனைவோருமான குமார் வேம்பு ரூ.10 கோடி நன்கொடையாக வழங்கியிருக்கிறார்.

— M. Arumugam

நாகூர் ஆண்டவர் தர்கா 470வது ஆண்டு கந்தூரி விழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



உலக புகழ்பெற்ற நாகூர் ஆண்டவர் தர்கா 470 வது ஆண்டு கந்தூரி விழாவை முன்னிட்டு நாகையிலிருந்து புனித கொடி ஊர்வலம் தொடங்கியது.

ஊர்வலத்தில் கண்ணாடி ரதம், டீஸ்டாகப்பல், செட்டிப்பல்லக்கு, பீங்கான் ரதம், முத்துப்பல்லக்கு உள்ளிட்ட அலங்கரிக்கப்பட்ட ஐந்து ரதங்களில் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்ட கொடிகள் ஏற்றப்பட்டு, நாகப்பட்டினம் நகரின் முக்கிய வீதிகள் வழியே நாகூருக்கு புறப்பட்டது. தாரை தப்பட்டையுடன் நடைபெற்று வரும் கொடி ஊர்வலத்தில் கொட்டும் மழையை பொருட்படுத்தாமல் வழி நெடுகிலும் சாதி, சமய வேறுபாடின்றி பொதுமக்கள் மலர்களை தூவி வழிபாடு செய்தனர்.

இரவு நாகூர் ஆண்டவர் தர்காவில் உள்ள ஐந்து மினாராக்களிலும் புனித கொடி ஏற்றப்பட்டது.

— MAHENDRAN M

அதிரடி உத்தரவு! ஒரே கடையில் 3 ஆண்டுகள் மட்டுமே பணியாற்ற அனுமதி!



தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு புதிய பணியிட மாற்றக் கொள்கையை டாஸ்மாக் நிர்வாகம் அமல்படுத்தியுள்ளது.

இதன்படி, ஒரே மதுபானக் கடையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பணிபுரிந்த மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்கள் கட்டாயமாக வேறு கடைகளுக்கு மாற்றப்பட உள்ளனர்.

மேலும், விற்பனை அடிப்படையில் கடைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஆட்கள் அதிகமாக உள்ள கடைகளில் இருந்து ஆட்கள் பற்றாக்குறை உள்ள கடைகளுக்கு பணியாளர்கள் மாற்றப்பட உள்ளனர்.

இதற்கான பணிகளை நவம்பர் 25ஆம் தேதிக்குள் முடிக்கவும், நவம்பர் 30ஆம் தேதிக்குள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒரே கடையில் நீண்டகாலமாகப் பணியாற்றி வந்த ஊழியர்களுக்கு இந்தப் புதிய நடைமுறை எந்த அளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது?

டாஸ்மாக் நிர்வாகத்தின் இந்தப் புதிய உத்தரவு தமிழக அளவில் கவனத்தைப் பெற்றுள்ளது.

— Musthafa Hussain, Coimbatore

CRIME

புதுச்சேரி: வில்லியனூரில் டிஐஜி சத்தியசுந்தர தலைமையிலான போலீசார் தீவிர கண்காணிப்பு



புதுச்சேரியில் அடுத்தடுத்து நடந்த கொலைச் சம்பவங்களைத் தொடர்ந்து, வில்லியனூர் பகுதியில் போலீசார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

டிஐஜி சத்தியசுந்தர தலைமையில், போலீசார் கண்காணிப்பு வலையமைப்பை விரிவாக்கி, சந்தேக நபர்களின் இயக்கத்தை கண்காணிக்கிறார்கள்.

இந்த நடவடிக்கை, சமீபத்திய கொலைச் சம்பவங்களின் பின்னணியில், சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போலீஸ் அதிகாரிகள், உள்ளூர் குடிமக்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

— Sudhakaran

காரைக்குடி முருகன் கோவில்களில் சஷ்டி வழிபாடு.



காரைக்குடி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஸ்ரீ வைத்திய நாத சுப்பிரமணி முருகன் கோவிலில் சஷ்டியை முன்னிட்டு இன்று சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அர்ச்சனை செய்து வழிபட்டனர்.

— M. Arumugam

பரோட்டா மாஸ்டர் ஜெயமூர்த்தி மீது சம்சு மதுப்பாட்டில் குத்தியதால் காயம், போலீஸ் கைது



திருச்சுழி, நவ.10 - விருதுநகர் மாவட்டம் திருச்சுழியை அடுத்து பூலாங்கால் அருகே உள்ள கீழப்பட்டியை சேர்ந்த 45 வயது ஜெயமூர்த்தி, கமுதியில் உள்ள ஹோட்டலில் பரோட்டா மாஸ்டராக வேலை செய்து வருகிறார்.

அவருடன் அதே பூலாங்கால் பகுதியை சேர்ந்த சர்க்கரை முகம்மது மகன் சம்சு, அதே ஹோட்டலில் சப்ளையராக பணிபுரிந்து வருகிறார். இருவரும் மோட்டார் சைக்கிளில் ஒன்றாக வேலைக்கு சென்று திரும்புவது வழக்கம். கடந்த சில வாரங்களாக ஜெயமூர்த்தி சம்சுவை மோட்டார் சைக்கிளில் ஏற்றாமல் தவிர்த்தார், இதனால் சம்சு அதிருப்தியடைந்தார்.

சம்பவத்தன்று, ஜெயமூர்த்தி பூலாங்கால் பகுதியில் உள்ள டீக்கடை ஒன்றில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது மதுபோதையில் வந்த சம்சு, மோட்டார் சைக்கிளில் தன்னை வேலைக்கு ஏற்றாததை பற்றி ஜெயமூர்த்தியுடன் தகராறில் ஈடுபட்டார். வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்பட்டது, பின்னர் சம்சு ஹோட்டல் பரோட்டா மாஸ்டர் ஜெயமூர்த்தியை மதுப்பாட்டில் கழுத்தில் குத்தினார், இதனால் அவர் படுகாயம் அடைந்தார்.

காயமடைந்த ஜெயமூர்த்தி பரளச்சி அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார். பரளச்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து, ஹோட்டல் சப்ளையர் சம்சுவை கைது செய்தனர்.

— Siva

காரைக்குடியில் பாரதி நாள் விழா கொண்டாட்டம்.



காரைக்குடியில் நேற்று பாரதி தமிழ் சங்கத்தின் சார்பில் பாரதி நாள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது இதில் ஏராளமான தமிழ் அறிஞர்கள் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர் இவ்விழாவில் சிறந்த தமிழறிஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

— M. Arumugam

நாகை மாவட்டத்தில் பனை மரங்களில் வெட்டபடாமல் உள்ள பனை மட்டைகளால் மனித உயிரை பாதிக்கும் நிலையில் மக்கள் அவதி



நாகை மாவட்டத்தில் பனை மரங்களில் வெட்டப்படாமல் உள்ள மட்டைகள்:மனித உயிரைப் பறிக்கும் கதண்டுகளால் பிரதாபராமபுரம் மக்கள் அவதி

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தாலுகா பிரதாபராமபுரம் ஊராட்சியில் பனை மரங்களில் வெட்டப்படாமல் உள்ள காய்ந்த மட்டைகளில் கதண்டுகள் கூடுகட்டி, பொதுமக்களைத் தாக்கி வருவதாகவும், இதனால் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் புகார் எழுந்துள்ளது. மேலும், கதண்டுகள் தாக்குதலுக்கு உள்ளான பலர் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும்

இதுகுறித்து பிரதாபராமபுரத்தைச் சேர்ந்த முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஆறுமுகம் கூறியதாவது :

ஏராளமான பனை மரங்கள் உளள நிலையில், அவற்றில் காய்ந்த பனை மட்டைகள் வெட்டப்படாமல் இருப்பதால் கதண்டுகள் அதிகளவில் உற்பத்தியாகி மனிதர்களைத் தாக்குவதால் பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்கள் அச்சத்துடன் வசித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக ஏற்கனவே மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, பொதுமக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக உள்ள பனை மரங்களில் காய்ந்து தொங்கும் மட்டைகளை உடனடியாக வெட்டி அகற்றி, கதண்டுகளின் தாக்குதலைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதுதவிர, அப்பகுதியில் தனியார் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்கள் அதிக வட்டி, அபராத வட்டி, காசோலை திரும்பியதற்கான கட்டணம் உள்ளிட்டவற்றை வசூலித்து பொதுமக்களைப் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்குவதாகவும், இதனால் சிலர் தற்கொலை முடிவுக்குத் தள்ளப்படுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், தனியார் கடன் வழங்குபவர்கள் மீதான புகார்களை விசாரிப்பதில் காவல்துறையினர் தலையிடுவதற்குப் பதிலாக, வருவாய்த் துறை மூலம் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

— MAHENDRAN M

CRIME

புதுச்சேரியில் தொடர்ந்த கொலை சம்பவத்திற்கு பதிலாக நான்கு காவல் அதிகாரிகள் ஆயுதப்படைக்கு மாற்றம்



புதுச்சேரி காவல் துறை தலைமையகம், சமீபத்தில் நடந்த தொடர்ச்சியான கொலை சம்பவங்களுக்கு பதிலாக, லாஸ்பேட்டை மற்றும் உருளையான்பேட்டை காவல் நிலையங்களில் பணியாற்றிய நான்கு குற்ற பிரிவு காவலர்களை ஆயுதப்படைக்கு பணியிட மாற்றம் செய்யும் உத்தரவை வெளியிட்டுள்ளது.

இந்த மாற்றம், சம்பவத்தின் பின்னணியில் உள்ள பாதுகாப்பு மற்றும் விசாரணை தேவைகளை கருத்தில் கொண்டு, காவல் துறை பணியாளர்களின் திறன் மற்றும் அனுபவத்தை அதிகப்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்டது.

மேலும், புதுச்சேரி பல்வேறு காவல் நிலையங்களில் நீண்டகாலமாக சேவை செய்த குற்ற பிரிவு காவலர்கள் விரைவில் மாற்றப்பட உள்ளதாகவும், இந்த நடவடிக்கை முழுமையான காவல் அமைப்பின் செயல்திறனை மேம்படுத்தும் என்று தலைமையகம் தெரிவித்துள்ளது.

— Sudhakaran, Puducherry

வில்லியனூரில் கொலை.....



கொலை செய்யப்பட்ட நபர் புதுச்சேரி வில்லியனூர் தொகுதிகுட்பட்ட நடராஜ் நகரை சேர்ந்தவர் முரளி (23), இவர் கடந்த ஜனவரி மாதம் மது அருந்தும் போது உடன் மரது அருந்திய ஜனா என்பவரை கொலை செய்த வழக்கில் இரண்டாவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் இவரை ஜனாவின் கூட்டாளிகள் யாரேனும் கொலை செய்திருக்கலாம் என்கிற கோணத்தில் போலீசார் விசாரணை.

— Sudhakaran, Puducherry

இடம் தொடரபாக ஆயவு.



காரைக்குடியில் புகழ்பெற்ற ஸ்ரீ

லலிதா முத்துமாரியம்மன் கோவில் பின்புறம் உள்ள நிலம் விவகாரமாக இரு தரப்பினரிடையே கடந்த இரண்டு வார காலமாக பிரச்சனை நிலவி வந்தது. இந்நிலையில் இன்று மதுரை அமர்வு உயர்நீதிமன்ற நீதிபதிகள் பார்வையிட்டு

பொதுமக்களுக்கானது இதில் யாரும் அத்துமீறி சொந்தம் கொண்டாட கூடாது என உத்தரவு பிறப்பித்தனர்.

— M. Arumugam

சிவகங்கை மாவட்ட பச்சேரி கிராமத்தில் சிக்கன் பிரியாணி விஷப்புகை: 10-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில்



சிவகங்கை மாவட்ட திருப்பாச்சேத்தி அருகே உள்ள பச்சேரி கிராமத்தில் ஒரு உறவினர் வீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட நரிக்குடி அருகே உள்ள என்.முக்குளம் கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் (60), தெய்வானை (55) மற்றும் பிற 25-க்கும் மேற்பட்டோர் வேனில் வந்து நிகழ்ச்சிக்கு சென்றனர். நிகழ்ச்சியின் போது, வீட்டார் மானாமதுரையில் உள்ள ஒரு ஹோட்டலில் சிக்கன் பிரியாணி ஆர்டர் செய்து, பார்சல் வடிவில் வழங்கப்பட்டது.

முகுளதை சேரநத குடுமபததினர வேனில் திரும்பியபின், சிக்கன் பிரியாணி சாப்பிட்ட ஜெயக்குமாரின் 3 வயது குழந்தை கோபிகா (3) உட்பட 10-க்கும் மேற்பட்டோர் உடனடியாக அதிகமான வாந்தி, பேதி, மயக்கம் போன்ற அறிகுறிகளை காட்டினர்.

அனைத்து பாதிக்கப்பட்டவர்கள் நரிக்குடி தனியார் ஆஸ்பத்திரி மற்றும் திருச்சுழி அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெறுகின்றனர். மருத்துவமனைகளில் நிலைமை நிலையானதாக உள்ளது.

— Siva